ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2415/61 - 2024 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2024.12.20
2415/61 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. - பி 5/ 2024*

### ஓய்வூதியக் குறிப்புகளின் 51 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இரண்டாயிரத்து இருபத்திரெண்டாம் ஆண்டு திசெம்பர் 12 ஆந் திகதிய 2310/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம், அதன் 17 ஆம் பிரிவில் காலத்துக்குக்காலம் மற்றும் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, ஓய்வூதிய குறிப்புகள் (திருத்தம்) சட்டத்தின் நியதிகளின்படி திருத்தப்பட்ட 1934, பெப்புருவரி 05 ஆந் திகதிய ஓய்வூதிய பிரமாணக்குறிப்புகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:

1. அதன் பிரிவு 17 இனை 17(1) ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

2. அதன் மீள் இலக்கமிடப்பட்ட உட்பிரிவு (1) இல் "விசேட மருத்துவ உத்தியோகத்தர்" எனத் தொடங்கி அவ்வுட்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிடுவதன் மூலமும்;

3. அதன் மீள் இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவினை சேர்ப்பதன் மூலமும்:

   "(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், விசேட மருத்துவர்கள், தர மருத்துவ அலுவலர்கள் மற்றும் பல் மருத்துவ அலுவலர்கள், மருத்துவ நிருவாக தரத்திலுள்ள எல்லா அலுவலர்கள், பல் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாளர்கள் என்போரின் கட்டாய ஓய்வு பெறும் வயது அறுபத்து மூன்று (63) ஆண்டுகளாகவிருத்தல் வேண்டும்.", ; அத்துடன்

4. இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் 2023, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

கலாநிதி **ஏ. எச். எம். எச். அபயரத்ன**,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
2024, திசெம்பர் 20.

EOG 12-0213

1A - G 43327 — 06 (2024/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.